புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • அக்டோபர் (OCTOBER) 01, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 40 • விலை(PRICE) ரூ.6.00

# ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட வேண்டும்

## ஜாதிப் பெருமைக்குரியதல்ல என்று மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

**திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஜாதிப் பெயர் நீக்க ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை மதுரை உயர்நீதிமன்றக் கிளை தள்ளுபடி செய்துள்ளது.**

மனதளவில் ஜாதிப் பெயர்களைத் தக்கவைத்துள்ளோரின் மனதில் தான் குழப்பம் உள்ளது. தெருக்களில் ஜாதிப்பெயர்களை நீக்கும் அரசாணை சமூகநீதி மாற்றத்திற்கு மிகவும் பொருத்தமானது எனக் கூறியுள்ள உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, அரசாணையை எதிர்த்த மனுவை தள்ளுபடி செய்தது. மதுரையைச் சேர்ந்த பரமசிவம், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் கடந்தாண்டு தாக்கல் செய்த மனுவில், “தமிழ்நாட்டில் உள்ள குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர் நிலைகளுக்கு வைக்கப்பட்டுள்ள ஜாதிப் பெயர்களை நீக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கிராமங்கள், குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர் நிலைகளுக்கு உள்ள ஜாதிப் பெயர்களை நீக்கி அரசாணையும் வெளியிடப்பட்டது. ஆதி திராவிடர் காலனி, வண்ணான்குளம் போன்ற ஜாதிப்பெயர்களை நீக்குதல், புதிய பெயரிடும் பணிகளை 2025 நவம்பர் 19ம் தேதிக்குள் முடிக்க வேண்டுமெனவும் அதில் கூறப்பட்டுள்ளது. சாலைகள், தெருக்கள் பெயர்கள் மாற்றுவது நடைமுறையில் பல பிரச்னைகள் உள்ளது. எனவே இந்த அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை ஏற்கனவே விசாரித்த நீதிமன்றம் ஜாதிப் பெயர்களை நீக்குவது தொடர்பான அரசாணையை செயல்படுத்த இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இந்த மனு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், “தமிழ்நாட்டில் உள்ள சாலைகள், தெருக்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் நீர்நிலைப் பகுதிகளுக்கு ஜாதிப் பெயர்களை நீக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

செங்கல்பட்டில் உள்ள ‘அரிஜன் காலனி’ தற்போது திருவள்ளுவர் காலனி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருவள்ளுவர் ஒரு புகழ்பெற்ற மனிதர் என்பதை நாம் ஒருபோதும் மறுக்க முடியாது. அவருடைய பெயரைச் சேர்ப்பது அந்த குறிப்பிட்ட காலனியில் உள்ள தனிநபர்களின் பெருமையை மட்டுமே அதிகரிக்கும். அவரை எந்த ஒரு அரசியல் கட்சியுடனோ அல்லது இயக்கத்துடனோ நாம் தொடர்புபடுத்த முடியாது. இதேபோல், ‘இருளர் காலனி’ என்பது கபிலர் தெருவாக மாற்றப்பட்டுள்ளது. கபிலர் என்பது புகழ்பெற்ற மனிதரின் பெயர்.

சலவையாளன் காலனி என்பது ரோஜா நகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, இது ஒரு மலரின் பெயரைக் குறிக்கிறது. இதேபோல், அருந்ததியர் தெரு காமராஜர் நகர் என்றும், நரிக்குறவர் காலனி பேரறிஞர் அண்ணா தெரு என்றும் பெயர் மாற்றமாகியுள்ளது. காமராஜரும், அறிஞர் அண்ணாவும் இம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர்கள். இவர்களது பெயர்களை மாற்றுப் பெயர்களாக வைப்பதில் எந்தவிதமான பிரச்னையும் இருக்க முடியாது.

வேலூரில் உள்ள ஆதிதிராவிடர் காலனி, கம்பர் தெரு என்றும், திருநெல்வேலியில் உள்ள பார்பர் காலனி பாரதிதாசன் தெரு என்றும் பெயர் மாற்றமாகியுள்ளது. இது கவிஞர்களின் பெயர்களே தவிர, தனிநபர்களின் பெயர்கள் அல்ல. காஞ்சிபுரத்தில் அருந்ததியர் குடியிருப்பு அவ்வையார் குடியிருப்பாகியுள்ளது. இந்தப் பெயரின் மீது எந்தவித சர்ச்சை அல்லது தகராறும் எழுப்ப முடியாது. இதேபோல் பல இடங்களில் கக்கன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மறைந்த அமைச்சர் கக்கன் நேர்மை, எளிமை மற்றும் பொது வாழ்வில் ஒழுக்கக் கொள்கைகளை உயர்த்தியதற்காக மிகவும் மதிக்கப்படுபவர் என்பது அனைவரும் அறிந்ததே எனவே, கொடுக்கப்பட்டுள்ள மாற்றுப் பெயர்கள் அனைத்தும், இந்த மாநிலத்தில் உள்ள பொதுமக்களால் மதிக்கப்படும் மற்றும் கவுரவிக்கப்படுவோரின் நடுநிலையான பெயர்கள் தான். செங்கல்பட்டில் உள்ள வண்ணார் ஏரி, கொன்றை ஏரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உண்மையில், தற்போதுள்ள பெயர்களை வெளிப்படையாகப் பேசக்கூட முடியாது. அவை மிகவும் பிறரை அவமதிக்கும் வகையில் உள்ளன, அவை பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. இந்த நடவடிக்கை பல ஆண்டுகளுக்கு முன்பே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மாற்றங்களை அறிமுகப்படுத்த அரசு இத்தனை ஆண்டுகள் காத்திருந்திருக்கக் கூடாது. மேலும் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய பெயர்களைக் கண்டறிந்து, விடுபட்ட பகுதிகளின் பெயர்களில் மாற்றத்தைக் கொண்டுவரும் வகையில் மேலும் ஒரு அரசாணையை வெளியிட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் அரசாணையை செயல்படுத்துவதில் நீதிமன்றத்திற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. இது அரசால் தொடரப்பட வேண்டும். ஜாதிப் பெயர்களை நீக்குவதால் குழப்பம் ஏற்படும் என்று மனுதாரர் கூறகிறார். ஆனால், மனதளவில் ஜாதிப் பெயர்களைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்களின் மனதில்தான் குழப்பம் இருக்கும். மனதிலிருந்து ஜாதியை நீக்கியவர்களின் மனதில் எந்தக் குழப்பமும் இருக்காது.

இது பொதுவான பயன்பாட்டிற்கு வரும் என்பதால் காலப்போக்கில் எந்த சிரமமும் இருக்காது. ஒரு குடியிருப்புப் பகுதியை ‘சக்கிலியன் குளம்’ என்று குறிப்பிடுவதில் என்ன பெருமை இருக்கும், இதை நாங்கள் ஏற்கவில்லை. மனப்போக்கில் மாற்றம் இருக்க வேண்டும். இந்த அரசாணை சமூகநீதி மாற்றத்திற்கு மிகவும் பொருத்தமானது. ஏற்கனவே விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என உத்தரவிட்டுள்ளனர்.

# ‘கொளத்தூர் மணி எழுத்தும் பேச்சும்’ இரு தொகுதிகள் விற்பனைக்கு தயார்!

ஓராண்டு காலமாய்க் காத்திருந்த ஆவணப் புதையல் வெளிவந்துவிட்டது! கழகத் தலைவர் “கொளத்தூர் மணி எழுத்தும் பேச்சும்” முதல் தொகுதி 608 பக்கங்கள் இரண்டாம் தொகுதி 680 பக்கங்கள் இரு தொகுதிகளும் சேர்த்து விலை ரூ.1000.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய கட்டுரைகள், நேர்காணல்கள், பிற நூல்களுக்கு எழுதிய அணிந்துரைகள், இயக்கக் கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்கங்களில் ஆற்றிய உரைகள், ஆகியவற்றைத் தொகுத்து இருபெரும் தொகுதிகளாக மிகச்சிறப்பாக, மிகத்தரமாக, நேர்த்தியாக, நன்செய் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் இத்தொகுதிகளை தொகுத்து வழங்கியிருக்கிறார்.



நூல் தேவைக்கு: 9566331195 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

# பாஜக ஆட்சியில் பார்ப்பனியம்

## நுகர் பொருள்களிலும் சைவ, அசைவ பாகுபாடு!

பெரும்பான்மை இந்துக்களுக்கு அசைவ உணவு பழக்கம் இருந்தாலும் இந்துத்துவ பார்ப்பனியம் சைவ உணவையே புனிதப்படுத்துகிறது. பார்ப்பனர்கள் அசைவ உணவைத் தீட்டாகக் கருதுகிறார்கள். சிறுபான்மை பார்ப்பனர்களின் கலாச்சாரத்தையே இந்து மக்களின் கலாச்சாரமாக ஆட்சியாளர்கள் திணிக்கிறார்கள். மாட்டுக்கறி சாப்பிடுகிற உழைக்கும் இந்துக்களை ‘இந்து தர்ம எதிரிகள்’ என்கிறார்கள். அண்மையில் புதுடெல்லியில் உலக தலைவர்கள் கூடிய பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் மோடி அசைவ உணவை முற்றிலும் தவிர்த்து சைவ உணவையே சர்வதேசத் தலைவர்களுக்கு பரிமாறினார். பல தலைவர்கள் விருப்பமின்றி இந்த உணவை சாப்பிடும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சீன அதிபர் இறுதிநாள் நிகழ்வு விருந்தைப் புறக்கணித்து விட்டார். இப்போது மக்கள் பயன்படுத்தும் நுகர் பொருள்களிலும் சைவம், அசைவம் என்ற பாகுபாடுகளை ஒன்றிய ஆட்சி திணித்திருக்கிறது.

சோப்பு, ஷாம்பூ உள்ளிட்ட பொருட்களில் சைவம், அசைவம் குறியீடு பதிக்கும் வகையில், ’பேக்கேஜிங்’ விதிகளில் மத்திய அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. உணவுப் பொருட்களின் பாக்கெட்களில் சைவம் என்றால் பச்சை நிறமும், அசைவம் என்றால் சிவப்பு நிறமும் குறியீடாக அச்சடிக்கப்பட்டிருக்கும். தற்போது நாம் அன்றாடம் பயன்படுத்தும் சோப்பு, ஷாம்பூ, டூத்பேஸ்ட் உள்ளிட்ட பொருட்களிலும் இந்த விதியைக் கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்தது. இதற்காக சட்ட அளவியல் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011ல் திருத்தம் செய்யப்பட்டு, உடனடியாக அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சோப்பு, ஷாம்பூ, டூத்பேஸ்ட் போன்ற பொருட்கள் முழு சைவம் என்றால் அதில் பச்சை நிற புள்ளியைக் குறியீடாகவும், விலங்குக் கொழுப்பு சேர்க்கப்பட்டால், அசைவம் என்பதைக் குறிக்க அதில் சிவப்பு அல்லது பழுப்பு நிற புள்ளியைக் குறியீடாகவும் அச்சிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், அழகு சாதனப் பொருட்களை வாங்கும் நுகர்வோர் தங்களுக்கு உகந்த பொருட்களை எளிதாகக் கண்டறிந்து வாங்க முடியும். இந்த நிற குறியீட்டை பொருள் பேக் செய்யப்பட்டிருக்கும் அட்டையின் மேல்புறத்தில் நுகர்வோர் கண்ணில் தெரியும்படி அச்சிட வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் மத்திய அரசு வழங்கி இருக்கிறது.

# தேர்தல் ஆணையரின் சட்டமீறல் மோசடிகள்!

தேர்தல் ஆணையர்கள் ஆளும் கட்சியின் கைப்பாவைகளாக இருந்துவிடக் கூடாது என்பதில் அரசியல் நிர்ணய சபையில் புரட்சியாளர் அம்பேத்கர் மிகவும் உறுதியாக இருந்தார். இதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு அந்தச் சட்டத்தின் வழியே தேர்தல் ஆணையர் தேர்வு செய்யப்பட வேண்டுமே தவிர, ஆட்சியாளர்களின் வழிகாட்டுதலில் செயல்படக் கூடாது என்பதற்காகவே ஒரு சட்டத் திருத்தத்தையும் அவர் முன்மொழிந்தார். அதுதான் 324(2) திருத்தம்!

ஆனால் அப்படி ஒரு சட்டம் நாடாளுமன்றத்தில் 74 ஆண்டுகளாக நிறைவேற்றப்படவே இல்லை என்பது தான் வரலாற்று சோகம்! அம்பேத்கர் அஞ்சியது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மக்களின் வாக்குரிமையைத் திருடிய தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஞானேஷ் குமார் இப்போது வசமாக சிக்கிக் கொண்டிருக்கிறார். அவர் பதவி விலக வேண்டும்; கைது செய்யப்பட வேண்டும் என்ற குரல் நாடு முழுதும் ஒங்கி ஒலிக்கிறது. மோடியும் அமித் ஷாவும் வளர்த்து வரும் செல்லக் குழந்தைதான் ஞானேஷ் குமார்.



ஆணையத்தின் மற்ற இரண்டு உறுப்பினர்களான சுக்பிர்சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷியும் பாஜகவின் நம்பிக்கைக்கு உரியவர்கள் தான் என்றாலும், அவர்களாலேயே சட்டமீறலை சகிக்க முடியாமல் கடந்த 10 மாதங்களில் ஞானேஷ் குமாருக்கு எதிராக 14 கடிதங்களை எழுதி இருக்கிறார்கள். பாஜகவின் அகில இந்திய தேர்தல் பொறுப்பாளராகவே தேர்தல் ஆணையத் தலைவர் செயல்பட்டிருக்கிறார்.

★ வாக்காளர்களின் வாக்குரிமையை உறுதி செய்வதும் அதற்கான பட்டியலைத் தயாரிப்பதும் தான் தேர்தல் ஆணையத்தின் வேலை; ஆனால் குமார் தனது சட்ட வரம்புகளை மீறி குடியுரிமையை உறுதிப்படுத்தும் வேலைகளில் இறங்கி இருக்கிறார். இது பாஜகவின் இந்துத்துவ செயல்திட்டம்.

> வாக்காளர்கள் பட்டியலைத் தயாரித்து சரி பார்க்கும் சட்டபூர்வமான உரிமை மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு மட்டுமே உண்டு. ஆனால் இந்த அதிகாரத்தை மாநில தேர்தல் அதிகாரிகளுக்குத் தெரியாமலேயே "இ.ஆர் ஓ.நெட்" என்ற மென்பொருளை உருவாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார். மாநில உரிமை மய்யத்திற்குப் போய்விட்டது.

★ புதிய வாக்காளர் சேர்ப்புக்கான எண்-6 படிவத்தில் வாக்காளர்களின் பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டிகள் அதற்கு முன் நடந்த தேர்தலில் வாக்களித்த விவரங்களைப் பதிய வேண்டும் என்ற புதிய பகுதியைத் திணித்து திக்கு முக்காட வைத்து விட்டார் . இப்படி எந்த ஒரு புதிய பகுதியும் சேர்ப்பதற்கு 1960-இல் உருவாக்கப்பட்ட தேர்தல் விதிகளே அனுமதிக்கவில்லை. இந்த சட்ட விரோதமான திணிப்பை உடனே நீக்க வேண்டும் என்று மற்றொரு தேர்தல் ஆணையர் டாக்டர் சந்து வலியுறுத்தி இருக்கிறார் குமார் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

★ வாக்காளர்கள் பட்டியலைத் தயாரித்து சரி பார்க்கும் சட்டபூர்வமான உரிமை மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு மட்டுமே உண்டு. ஆனால் இந்த அதிகாரத்தை மாநில தேர்தல் அதிகாரிகளுக்குத் தெரியாமலேயே "இ.ஆர் ஓ.நெட்" என்ற மென்பொருளை உருவாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார். மாநில உரிமை மய்யத்திற்குப் போய்விட்டது.

★ இந்த மென்பொருளை தேர்தல் ஆணையம் மோசடியாக அவ்வப்போது தனது வசதிக்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் 'ஆதார்'அடையாளத்தை பதிவேற்ற முடியாமல் திடீரென்று அறிவிப்பு ஏதுமின்றி முடக்கியது.

உயர் அதிகார மட்டங்களில் உள்ள பாஜக ஆதரவு அதிகாரிகளின் பட்டியலையும் இந்த இணையத்தில் இணைத்து அவர்களுக்கு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த நடவடிக்கைகளுக்கு நீண்ட வரிசையில் நிற்க வைக்காமல் முன்னுரிமை வழங்குவதற்கு தேர்தல் ஆணையத்தின் இந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக "ரிப்போர்ட்டர்ஸ் கலெக்ட்" என்ற இணைய இதழ் ஆய்வு செய்து அம்பலப்படுத்தியிருக்கிறது.

★ உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்த போது இந்த மென்பொருளை சமர்ப்பிக்க மறுத்த ஆணையம் அது பழுதுபட்டு திறம்பட செயல்படாமல் போயிற்று என்று காரணம் கூறியது.

★பல லட்சம் வாக்காளர்களின் உரிமையைப் பறிப்பதற்கு இந்த மென்பொருளை மோசடியாக பயன்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக மேற்கு வங்கத்தில் வாக்குரிமை பறிக்கப்பட்ட 38 லட்சம் வாக்காளர்கள் நீதிமன்றம் சென்று நீதிமன்றத்தின் வழியாக வாக்குரிமையை மீட்டார்கள். நீதிமன்றம் வழியாக வாக்காளர்கள் பெற்ற உரிமையை எதிர்த்து மேற்குவங்க அதிகாரிகள் மேல்முறையீடு செய்தார்கள்; இந்த உரிமைக்கு ஆணையத்தின் அனுமதியே பெறவில்லை என்று உறுப்பினர் சந்து விளக்கம் கேட்டார். வாக்களிக்கும் உரிமை நீதிமன்றம் அனுமதி அளித்தும் மறுக்கப்பட்டது.

★ கோவாவில் உள்ளூர் தேர்தல் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட 97 வாக்காளர்களின் பெயர்கள் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மென்பொருளில் இடம் பெற்ற வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை. இத்தனைக்கும் இந்த வாக்காளர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்று தங்கள் வாக்குரிமையை மீட்டவர்கள். தலைமைத் தேர்தல் ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தச் செயலி மாநில தேர்தல் அதிகாரிகளின் கருத்துக்களை பதிவேற்ற முடியாமல் நிராகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது என்பது தான் மிகப்பெரும் கொடுமை! தேர்தல் அதிகாரிகளுக்கு சட்டம் வழங்கிய உரிமைகளும் திருடப்பட்டன.

★ இதை உணர்ந்த கோவா மாநிலத் தேர்தல் அதிகாரி இணையத்தைப் பயன்படுத்தாமல் 18 முறை கடிதம் வழியாக இந்த வாக்காளர்களின் பெயர்களை இணைக்கக் கேட்டும் தேர்தல் ஆணையம் கண்டு கொள்ளவில்லை. இந்த மென்பொருளை வடிவமைத்த நிறுவனத்தின் பெயரையும் ஆணையம் ரகசியமாகவே வைத்திருக்கிறது.

★ தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்கும் முறை குறித்து அம்பேத்கர் வலியுறுத்தியபடி நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றாத நிலையில் 2015-ல் அனூப் பரன்வால் என்பவர் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது; நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் காலம் வரை தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்க பிரதமர்; எதிர்க்கட்சித் தலைவர்; உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவை அமைக்கலாம் என்ற யோசனையை முன் வைத்தது.

★ எட்டு ஆண்டு காலம் தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களை இந்த மூவர் குழுவே இறுதி செய்தது.தலைமை நீதிபதியும் எதிர்க்கட்சி தலைவரும் உறுப்பினராக இருக்கும் குழுவில் தங்கள் ஆதரவாளர்களை தலைவராக்க முடியாது என்பதால், 2023-ஆம் ஆண்டில் ஒன்றிய பாஜக ஆட்சி நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்து குழுவில் இருந்து தலைமை நீதிபதியை நீக்கியது.

★ பிரதமரும் அவரால் நியமிக்கப்படும் ஒரு மத்திய அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் குழுவில் இடம் பெறுவார்கள் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் வழியாக மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியை ஒன்றிய ஆட்சி தன் வசம் வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் தங்களுக்கு ஆதரவாக இருப்பவர்களைத் தேர்தல் ஆணையர்களாக நியமித்தார்கள். அம்பேத்கர் கொண்டுவந்த சட்டத் திருத்தத்தின் நோக்கத்தையே சாகடித்தது ஒன்றிய ஆட்சி.

ஒன்றிய ஆட்சியில் உள்துறை இணைச் செயலாளராகப் பணியாற்றிய ஞானேஷ் குமார் ஏன் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்?

★ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 370வது சிறப்புரிமை பறிப்புக்கான பொறுப்பு இவரிடம் தான் ஒப்படைக்கப்பட்டது; அதைச் சிறப்பாக செய்து முடித்தார்.

★ அயோத்தி ராமன் கோயில் கட்டுமானத்திலும் இவருக்கு மிகப்பெரிய பங்கு உண்டு; அறக்கட்டளை உருவாக்குவதில் இவர் தான் மூளையாக செயல்பட்டார்.

★ கேரள மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி.ஜி தாம்சன் ஒரு தகவலை வெளியிட்டுள்ளார். ஞானேஷ் குமார் தன்னை பாஜக சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வற்புறுத்தியதாகவும் அதைத்தான் மறுத்ததாகவும் கூறியுள்ளார் அந்த அளவுக்கு பாஜகவின் தீவிர விசுவாசி.

★ இந்திய அரசியல் வரலாற்றிலேயே இல்லாத மிகப் பெரிய மோசடி இப்போது அரங்கேறி இருக்கிறது. மக்கள் வாக்குரிமை திருடப்பட்டு இருக்கிறது. அரசியல் சட்டத்தின் 16வது பிரிவு தேர்தல் ஆணையர் மீது வழக்கு தொடர்வதிலிருந்து பாதுகாப்பு தருகிறது என்றாலும், முறைகேடு நிரூபிக்கப்படும்போது கைது செய்வதற்கு அந்தப் பிரிவு தடை போடவில்லை என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள்.

★ வாக்குரிமை பறிக்கப்பட்டவர்கள் மீண்டும் உரிமை கோரலாம் என்று ஆணையம் சரிக்கட்டும் வேலையில் இறங்கி இருக்கிறது.

★ கரப்பான் பூச்சி ஜனதா கட்சி ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி கெடு விதித்திருக்கிறது. தேர்தல் ஆணையத் தலைவர் மட்டுமல்ல அவரை முறைகேடாக செயல்பட வைத்த ஒன்றிய பாஜக ஆட்சியும் இதில் குற்றவாளி தான்! தேர்தல் ஆணையர் இவ்வளவுக்குப் பிறகும் பதவியில் தொடர்ந்தால் உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று மார்தட்டிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை உலகமே கைகொட்டிச் சிரிக்கும்!

**விடுதலை இராசேந்திரன்.**

## பம்பாய் அய்.அய்.டி-யில் ஜாதிவெறி; தலித் மாணவர் தற்கொலை!

பம்பாய் அய்.அய்.டியில் ஷகில்வாக்கோடு என்ற இரண்டாம் ஆண்டு படிக்கும் தலித் மாணவர் ஜாதிக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். பேராசிரியர் ஒருவரின் ஜாதிவெறிச் செயல்படுகளால் இந்தத் தற்கொலை நிகழ்ந்திருக்கிறது என்று மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். மாணவர்களின் தொடர் போராட்டத்திற்குப் பிறகு சூரியநாராயணாடூலா என்ற பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; அவர் விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார். தொடர்ந்து அய்.அய்.டி, அய்.அய்.எம்-களில் தலித் மாணவர்கள் துன்புறுத்தப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பெரும்பான்மை மாணவர்கள் போராடி வருகிறார்கள். இதுகுறித்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள குழு ஒன்றையும் அய்.அய்.டி நிர்வாகம் அமைத்திருக்கிறது.

இந்தப் பிரச்சனையில் அய்.அய்.டி பார்ப்பன உயர்ஜாதி அதிகாரிகளுக்கும் தொடர்பு உண்டு என்றும், அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் தற்கொலை செய்து கொண்ட தலித் மாணவரின் தந்தை வலியுறுத்தியிருக்கிறார். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தான் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

தலித் மாணவர் தேர்வு எழுத செல்லும் போது தனது அலைபேசியை பயன்படுத்தி முறைகேடாக தேர்வு எழுத முயன்றார் என்று கூறப்படுவது பொய் குற்றச்சாட்டு என்றும், அதற்கான சிசிடிவி கேமரா காட்சிகளை காட்ட முடியுமா? என்றும் போராடும் மாணவர்கள் கேட்கிறார்கள்.

தலித் மாணவர்கள் தற்கொலைகளால் பம்பாய் அய்.அய்.டி கல்லூரி வளாகங்களிலும் விடுதிகளிலும் தொங்கு மின்விசிறிகள் அகற்றப்பட்டு சுவர் மின்விசிறிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. தொங்கும் மின்விசிறி தூக்கில் தொங்குவதற்கு பயன்படுவதே இந்த மாற்றத்திற்கான காரணம்.

பார்ப்பனர்களின் ஜாதியப் பாகுபாடுகளால் அய்.அய்.டி, அய்.அய்.எம்-களில் 13,600 பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் மாணவர்கள் படிப்பைப் பாதியிலேயே இடைநிறுத்தம் செய்துவிட்டு வெளியேறுகிறார்கள் என்று உச்சநீதிமன்றத்தின் பணிக்குழு அறிக்கை தெரிவித்துள்ளது.

# தேவதாசி முறை ஒழிந்த வரலாறு

தேவதாசி முறையை உயர்த்திப் பிடிக்கும் கருத்தரங்கு சென்னையில் "தேவநாயகிகள்" என்ற பெயரில் நடைபெற்றிருக்கிறது. இங்கே நடந்த நிகழ்வுகளை திராவிடர் கழகத்தின் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் தனது முகநூல் பதிவின் மூலம் வெளிக்கொண்டு வந்து இருக்கிறார்.

கருத்தரங்கில் பேசிய கவிஞர் வெண்ணிலா, எழுத்தாளர் ஜெயமோகன் உள்ளிட்ட சிலர் தேவதாசி முறையை அழுத்தமாக ஆதரித்தும் வேறு சிலர் எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள். பெண்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் இந்தச் சிறப்பான முறையை பிரிட்டிஷ் மிஷனரிகளும் பிரிட்டிஷ் ஆட்சியும் திட்டமிட்டு சீர்குலைத்தனர் என்ற வழமையான சங்கிகளின் பிரச்சாரம் தான் இங்கும் நடந்திருக்கிறது.

பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்தக் கொடூரமான அடிமை முறையின் வரலாற்றை மீண்டும் இளைஞர்களிடம் எடுத்துக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார்கள். தேவதாசி முறை என்பதுதான் என்ன?

★பருவத்துக்கு வராத பெண்களை முதலில் கடவுளுக்கு **"பொட்டுக் கட்டுதல்"** என்ற சடங்கை நடத்தி காணிக்கையாக்குகிறார்கள். சடங்குகளை நடத்துகிறவர்கள் பார்ப்பனர்கள்; கடவுளின் சார்பாக இந்தச் சிறுமிகளுக்குத் தாலி கட்டுவதும் பார்ப்பனர்கள் தான்!



**விற்பதற்கும் வாங்குவதற்கும் இடமாற்றம் செய்வதற்குமான சந்தைப் பொருளாக தேவதாசிகளை அரசாணை மூலம் அரசர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்**

★ பெண் பருவமடைந்ததும் அவர்களுக்கு **"நித்திய சுமங்கலி"** என்ற பட்டத்தைச் சூட்டி மீண்டும் பார்ப்பனர்கள் சடங்குகளை நடத்துகிறார்கள். அதற்கு ஊர் பெரிய மனிதர்களும் கோயில் தர்மகர்த்தாக்களும் வருகிறார்கள் . பிறகு அந்தப் பெண் ஏதேனும் ஒரு கோயிலுக்கு தேவதாசியாக நியமிக்கப்படுகிறார்.

★ எழுதக் கூசும் அளவுக்கு செயற்கையாக பருவமடைய வைக்கும் கொடூரமான சித்திரவதை முறைகளும் பின்பற்றப்பட்டு இருக்கின்றன.

★**"நித்திய சுமங்கலி"** என்று பார்ப்பனர் சூட்டிய பட்டத்திற்கான அர்த்தம் ; அந்தப் பெண் சுதந்திரமாக திருமணம் செய்து கொள்ளாமல் விரும்பும் எவருடனும் வாழலாம் என்பதுதான்.

★பாலியல் துணைவர்களை பெண்கள் தங்கள் விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் பெண்களுக்கு இது சுதந்திரம் என்றும் சனாதனப் பெருமை கொண்டாடினார்கள்.

★ஆனால் நிலப் பிரபுக்கள்; கோயில் அறங்காவலர்கள்; பார்ப்பன அர்ச்சகர்களின் உடல் பசிக்கு இவர்கள் தீனியாக்கப்பட்டார்கள் என்பது தான் வரலாறு! இந்தப் பெரிய மனிதர்கள் தேவதாசி பெண்களுக்கு வீடுகளையும் நிலங்களையும் தானமாக வழங்கினார்கள்; என்றாலும் அவை கோயிலின் பெயர்களிலே வழங்கப்பட்டன.

★ இந்தச் சொத்துக்களின் உரிமைகளை தேவதாசி பெண்கள் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று சொன்னால் அவர்கள் ஒரு பெண் வாரிசை கட்டாயம் உருவாக்க வேண்டும். இப்படி தேவதாசிகளுக்கு பிறக்கும் குழந்தைகள் வேறு எந்தத் தொழிலையும் செய்ய முடியாது; மீண்டும் அவர்கள் தேவதாசியாகவே மாற வேண்டும்.

★தேவதாசிகள் மரணமடைந்து விட்டால் கோயில் வாசலில் அந்தப் பெண்ணின் உடல் சிறிது நேரம் வைக்கப்பட்டு அன்று முழுதும் கோயிலில் பூஜைகள் நிறுத்தப்பட்டு தீட்டு கழிக்கப்படும்.

★தேவதாசிகள் மீது அடிமை முத்திரைகள் பொறிக்கப்பட்டு ஆடு, மாடுகள் போல் நடத்தப்பட்டார்கள் என்பதற்கான கல்வெட்டு சான்றுகள் உள்ளன.

★காளஹஸ்தியில் உள்ள முதலாம் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டில் இந்தப் பெண்கள் உடல்மீது முதலில் அரச முத்திரை தவறுதலாக குத்தப்பட்டு பிறகு அதை நீக்கி திரிசூல முத்திரைகள் உடலில் குத்தப்பட்டதாக கூறுகிறது.

★ பெண் வேலையாட்களையும் அவர்களது குழந்தைகளையும் திருவழுக்கரை கோயிலுக்கு பரிசுப் பொருளாக வழங்கியதையும் தேவரடியார்கள் விலைக்கு வாங்கப்பட்டதையும் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள திருவழுக்கரை கல்வெட்டு கூறுகிறது.

★ ஒரு ராணுவ தளபதி தனது மகளையும் இரண்டு பேரக் குழந்தைகளையும் திரிசூலம் முத்திரை குத்தி கோயிலுக்கு பரிசாகக் கொடுத்ததாக வட ஆற்காடு மாவட்டத்தின் "திரு வல்லம்" கல்வெட்டு கூறுகிறது.

★ விற்பதற்கும் வாங்குவதற்கும் இடமாற்றம் செய்வதற்குமான சந்தைப் பொருளாக தேவதாசிகளை அரசாணை மூலம் அரசர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தொடக்கத்தில் தேவதாசிகள் கோயில்களில் சுத்தம் செய்வதற்கும் பாத்திரங்களைக் கழுவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் காலப்போக்கில் தான் அவர்கள் நடன இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்டனர் என்று ஆய்வு நூல்கள் கூறுகின்றன.

*(South Indian history Congress proceedings,Kakaiya University,Warangal pp 166- 167)*

கிறிஸ்தவ மிஷனர்களின் சதி என்பது ஆர்.எஸ்.எஸ் சங்கிகளின் திசை திருப்பும் சூழ்ச்சிக்கதை இந்தச் சமூகக் கொடுமையை எதிர்த்து இந்தியாவில் பெண்கள் இயக்கங்கள் போராடின. 1912-ல் மானக்ஜி தாதாபாய்- முதோகர்- மாடகர் என்ற மூவரும் இணைந்து இந்த முறையை ஒழிக்கக் கோரி டெல்லி நாடாளுமன்றத்தில் மூன்று மசோதாக்களைக் கொண்டு வந்தனர். சென்னை மாகாணத்தில் முத்துலட்சுமி ரெட்டி மற்றும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் இணைந்து தொடர்ந்து போராட்டங்களை நடத்தினர். காந்தியார் இதைக் கடுமையாக எதிர்த்து ஒழிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தார். தேவதாசிப் பெண்களைச் சந்தித்து பேசினார். அந்தக் காலகட்டத்தில் தான் கோயில்கள் விபச்சார விடுதிகளாக மாறி வருகின்றன என்ற கடும் சொற்களையும் காந்தி பயன்படுத்தினார்.

ஆனால் காங்கிரஸ் கட்சியில் இருந்த சத்தியமூர்த்தி போன்ற சனாதன பார்ப்பனர்கள் தேவதாசி முறையை ஒழிக்கக் கூடாது என்று பிடிவாதம் காட்டினர். **‘தடைச் சட்டம் வந்தால் அதை எதிர்த்து சிறைக்குப் போவேனே தவிர இந்து தர்மத்தை எதிர்த்து நரகத்துக்குப் போக மாட்டேன்’ என்று திமிரோடு பேசினார் சத்தியமூர்த்தி. சத்தியமூர்த்தி அப்படி விரும்பினால் அவரின் ஜாதிப் பெண்கள் தேவதாசிகளாக மாறட்டும் என்று பதிலடி தந்தார் முத்துலட்சுமி ரெட்டி. இந்தப் பதிலைக் கூறுமாறு முத்துலட்சுமி ரெட்டிக்கு அறிவுறுத்தியவர் பெரியார்.**

பெரியாரின் சுயமரியாதை இயக்கமும். "குடிஅரசு" பத்திரிக்கையும் தேவதாசி ஒழிப்புப் போராட்டத்தில் உறுதியாக நின்றது என்பது வரலாறு! இந்தியாவில் ஜாதிப் பிளவுகளையும் இந்து, முஸ்லீம் மோதல்களையும் பிரிட்டிஷ்காரர்களே உருவாக்கினர் என்ற ஆர்.எஸ். எஸ்.காரர்களின் பொய் பிரச்சாரத்தைத் தான் இந்த கருத்தரங்கிலும் பேசியிருக்கிறார்கள்.

சதி ஒழிப்பு, பால்ய விவாக ஒழிப்பு, விதவை மறுமணம் போன்ற சட்டங்களை பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காக கிறிஸ்தவ மிஷனரிகளின் சதி என்று இவர்கள் எதிர்ப்பார்களா?

பெண்களுக்கு அடிமை முத்திரைக் குத்தி சந்தைகளில் விற்பனைப் பொருளாக்கப்பட்ட இந்தக் கொடூரமான வரலாற்றுப் பக்கங்களை பார்க்காமல் இசையும் நடனக்கலையும் வளர்ந்தது என்று பேசுகிறவர்களுக்கு பெரியாரின் ஒரு கருத்தைத் தான் பதிலாக கூற வேண்டி இருக்கிறது.

மடமையையும் இழிவையும் திணிக்கும் பக்தி இலக்கியங்களில் தமிழின் பெருமையைத் தேடியவர்களுக்கு பெரியார் சொன்ன பதில் அது **"மலத்தில் அரிசியைப் பொறுக்காதீர்கள்; அரிசி வேண்டுமானால் அரிசி கடைக்கு போங்க"**

- விடுதலை இராசேந்திரன்.

## தேவதாசி முறையை ஒழித்து பெரியார் போட்ட முதல் உத்தரவு

**ஈரோடு தேவஸ்தானக் கமிட்டித் தலைவராக இருந்த போது தேவதாசி உரிமைகளை விற்பனைப் பொருளாக்கியதை பெரியார் தடை செய்தார். இதற்கு தேவதாசிகள் பெரியாரைக் கண்டித்தார்கள். இதுகுறித்து பெரியார் பேசிய உரையிலிருந்து...**



பெண்களுக்குக் கடவுள் பேரில் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுவது என்று நேற்றுவரையில் இருந்து வந்ததே! கடவுள் காரியம் என்றும், சாஸ்திர முறைகள் என்றும் கூறிப் பொட்டுக்கட்டி விடப்பட்டவர்கள் எல்லாம் நம் அக்காள் தங்கைகள்தானே? நம் சூத்திர ஜாதித் தாய்மார்கள் தானே?

முதலாவது நான்தான் இந்த முறையை வெறுத்தேன். நான் 8 ஆண்டு தேவஸ்தான கமிட்டி செக்ரெட்டரியாகவும், 10 ஆண்டு தேவஸ்தான கமிட்டித் தலைவனாகவும் இருந்தேன். அப்போதுதான் இந்தக் கொடுமைகளை எல்லாம் படித்தேன். நான் எந்த ஊர்க் கோயிலுக்குப் போனாலும் 10, 20 தேவரடியார்கள் கோயில் மரியாதை மேளதாளத்துடன் வரவேற்கக் காத்துக் கிடப்பார்கள்! இவர்கள் எல்லாம் யார்? தேவடியாள் என்ற தனி ஒரு ஜாதியாக வந்தவர்களா? கொடுமுடியில் தேவடியாளுக்குக் கவுண்டர் என்ற பட்டம்! திருநெல்வேலி, தஞ்சை மாவட்டங்களில் பிள்ளை என்ற பட்டம்! சென்னையிலே முதலியார்! இப்படி நம்மவர்கள் தானே!

அந்தக் காலத்தில் தேவடியாள்கள் தங்களது கோயில் உரிமையை ரூ.15 முதல் ரூ.90 வரை வாங்கிக்கொண்டு விலைக்கு விற்றுவிடுவார்கள். அப்படி வாங்குகிறவளும் தேவடியாள் வாங்கமாட்டாள். மற்ற ஜாதிப் பெண்களும் அந்த உரிமையினை வாங்கிக் கொண்டு, அவர்களும் தேவடியாள் போல் காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆட ஆரம்பித்தார்கள்.

**நான்தான் முதல் முதல் இப்படி உரிமைகளை விற்றால் செல்லாது என்று உத்தரவு போட்டேன். அந்தக் காலத்தில் அப்பீல் எல்லாம் கலெக்டர் அளவோடு நின்றுவிடும். இப்போது போல அய்க்கோர்ட்டுக்கு எல்லாம் வராது. பிறகு தேவதாசிகளை நியமிக்கக்கூடாது என்றும், வாரிசு இல்லாவிட்டால், அந்தப்பதவி அத்தோடு முடிந்து விடும் என்றும் உத்தரவு போட்டேன்.**

பிறகு சட்டசபையில் இதுபற்றிய தீர்மானங்கள் எல்லாம் வந்தது. பார்ப்பனர்களும், வைதிகர்களும் எதிர்த்ததோடு அல்லாமல் தேவடியாள்கள் என்பவர்கள் எல்லாம் கூட்டம் போட்டு என்னைக் கண்டித்தார்கள். எங்கள் பிழைப்புப் போய்விட்டால், நாங்கள் என்ன செய்வது என்றார்கள். எப்படியோ நம்ம உணர்ச்சி உடையவர்கள் ஏராளமாக இருந்ததால், இது சட்டமாகி விட்டது.

(26.08.1959- அன்று வாலி கண்டபுரத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை. 31.08.1959- ’’விடுதலை”இதழில் வெளியானது)

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

## கலைநிகழ்ச்சிகள், குடும்ப விழாக்கள், பொதுக்கூட்டங்கள்

# கழகத் தோழர்களின் எழுச்சி செயல்பாடுகள்

ஈரோடு (வடக்கு) கோபி மாவட்டக் கழகம் பெரியார் பிறந்த நாள் விழா நிகழ்வுகள்:

**அம்மாபேட்டை ஒன்றியம்:** குருவரெட்டியூர் பகுதியில் உள்ள தந்தை பெரியார் சிலை, பெரியார் படிப்பகம், சமத்துவபுரம் ஆகிய பகுதிகளில் கழகத்தின் மாவட்டத் தலைவர் நாத்திகசோதி தலைமையில் மாலை அணிவித்தனர். **நம்பியூர் ஒன்றியம்:** நம்பியூர் பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு கழகத்தின் மாவட்டச் செயலாளர் செல்வகுமார் தலைமையில் மாலை அணிவித்தனர். புலவன் சிறை பகுதியில் நடராஜ் தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. இரங்கநாதபுரம் பகுதியில் அமைக்கபட்டிருந்த பெரியார் படத்திற்கு இரமேசு தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. **சிறுவலூர்:** கோபி ஒன்றியம் பகுதியில் பெரியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிறுவலூர் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் மாலை அணிவித்தனர்.





**கொளப்பலூர்:** கொளப்பலூர் பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த பெரியார் படத்திற்கு கொளப்பலூர் பேரூராட்சித் தலைவர் அன்பரசு ஆறுமுகம் மாலை அணிவித்தார். தோழர்கள் அனைவரும் சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அயலூர் சமத்துவபுரம் பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு திமுக தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் சரண்யா அன்பரசு தலைமையில் மாலை அணிவித்தனர். கோபி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டு இருந்த பெரியார் படத்திற்கு வழக்குரைஞர் பிரிவு செயலாளர் செகதீஸ்வரன் தலைமையில் மாலை அணிவித்தனர். கோபி பெரியார் சிலைக்கு சசி, பிரணீதா, சரண்யா, மணிமொழி ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து சமூக நீதிநாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. ல. கள்ளிப்பட்டி பகுதியில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு ஈஸ்வரமூர்த்தி தலைமையில் மாலை அணிவித்தனர்.

**கோட்டுபுள்ளாம்பாளையம்:** பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த படத்திற்கு மாலை அணிவித்து கழக கொடியினை மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வகுமார் ஏற்றி வைத்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. **அளுக்குளி:** அளுக்குளி பகுதியில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு தங்கம் தலைமையில் மாலை அணிவித்தனர். ***T.N.பாளையம் ஒன்றியம்:*** காசிபாளையம் பகுதியில் வேலுச்சாமி தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தனர்.

**சத்தி ஒன்றியம்:** புது ரோடு அண்ணா நகர் பகுதியில் சிதம்பரம் தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தனர். அரசு பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு எழுதுபொருட்கள் மற்றும் நோட்டுகள் வழங்கப்பட்டன. சத்தியமங்கலம் பகுதியில் பழைய பேருந்து நிலையம், எஸ். ஆர்.டி கார்னர் ஆகிய பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் முத்துசாமி தலைமையில் மாலை அணிவித்தனர். விசிக மாவட்டச் செயலாளர் தம்பிராஜன், புஇமு பாலு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர் ஸ்டாலின் சிவக்குமார், விசிக மணிமேகலை, தலித் விடுதலைக் கட்சி சகுந்தலா, கழகத்தின் சார்பில் சசி ஆகியோர் உரையாற்றினார். மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் சிறப்புரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் நிவாஸ் நன்றி கூறினார்.

முத்துசாமி- சித்ரா ஆகியோரின் இல்லத்தில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் தோழர்கள் ரமேஷ், மயில்சாமி, நடராஜ், கலைச்செல்வன், காமராஜ், முருகேஷ், சந்திரன், பழனிச்சாமி, அருளானந்தம், ஜெகநாதன், ஈஸ்வரமூர்த்தி, தயாநிதி, செந்தில்குமார், ஜெகதீஸ்வரன், சசி, கிருஷ்ணமூர்த்தி, தங்கம், கருப்பணன், சித்தா பழனிச்சாமி, வேலுச்சாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் முத்து, தமிழரசு, சிதம்பரம் சூர்யா, தனசேகர், தேவராஜ, மோகன், நஞ்சப்பன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**ஈரோடு தெற்கு:** மாவட்டக் கழகம் சார்பில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள பெரியாரின் சிலைக்கு அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. சமூகநீதிக் கூட்டமைப்பு முன்னெடுத்த சமூகநீதிப் பேரணி தந்தை பெரியார் சிலை வளாகத்தில் துவங்கி ஈரோடு மணிக்கூண்டு வழியாக பெரியாரின் நினைவு இல்லத்தில் நிறைவுற்றது. திவிக, தி.க, தபெதிக, ஈரோடு மக்கள் இயக்கம் மற்றும் தோழமைக் கட்சிகள் பங்கேற்றன.

**கும்பகோணம்:** நாச்சியார் கோவில் பேருந்து நிலையத்தில் கழகத்தின் சார்பில் பெரியார் சிலைக்கு சோலை மாரியப்பன் தலைமையில் மாலை அணிவித்தனர். கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



**கடலூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பாக காலை 8.30 மணி அளவில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் பெரியார் சிவா, அறிவியல் மன்ற அமைப்பாளர் அறிவழகன், பெரியார் பிஞ்சு பாடகர் திராவிட மகிழன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பேராவூரணி:** தந்தை பெரியார் 148-வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சித.திருவேங்கடம் தலைமையில் கழக மாணவர் அணி பொறுப்பாளர் சியாம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். கழகப் பொறுப்பாளர்கள் உதயகுமார், பெரியசாமி, கோவேந்தன், ஜெயச்சந்திரன் மற்றும் திமுக சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், திமுக ஒன்றியச் செயலாளர் க.அன்பழகன், திமுக நகரச் செயலாளர் செ.சேகர், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்.எஸ்.வேலுச்சாமி, விசிக நகரச் செயலாளர் பூ.தினேஷ் குமார் மற்றும் தி.க மாவட்டத் தலைவர் வை.சிதம்பரம் உள்ளிட்ட அனைத்து கட்சிப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.




**மதுரை:** மாவட்டக் கழகம் சார்பாக பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். தோழர்கள் முருகேசன், வாசுகி, சத்தியமூர்த்தி, வேங்கைமாறன் மற்றும் காமாட்சி பாண்டி கலந்து கொண்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. தமிழ் தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பரிதி கலந்து கொண்டார்.

**கள்ளக்குறிச்சி:** மாவட்டக் கழகம் சார்பில் கடுவனூரில் காலை 10 மணி அளவில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தனர். சங்கராபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு 11 மணி அளவில் மா.குமார் ரிஷிவந்திய ஒன்றியத் தலைவர் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. செந்தமிழ்பட்டு கிராமத்தில் பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு சே.வே. ராஜேஷ் தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பாக்கம் புதூர் கிராமத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். தோழர்கள் இரா.கார்மேகம் ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர், ராமலிங்கம் மக்கள் அதிகாரம், மாவட்டச் செயலாளர் தி.க சண்முகம், அ. ஏழுமலை கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர், மு.நாகராஜ், கி.ஆனந்தன், கு.பாபா சு.வல்லரசு, து. நவீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு தெற்கு, மதுரையில் குடும்ப விழா

ஈரோடு மாவட்டக் கழகம் சார்பில், 20.09.26 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு பவானி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பெஸ்ட் மகாலில் கழகத் தோழர்களின் குடும்ப விழா நடைபெற்றது. மாவட்ட தலைவர் சென்னிமலை செல்வராசு தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் எழிலன் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி கலந்து கொண்டார்.




மேட்டூர் ஆசிரியர் குமரேசன், உடல் ஆரோக்கியம் குறித்தும், உடல் நலத்தைப் பேண வேண்டியதன் அவசியம் குறித்தும், உடல் வலிமை பெற என்னவெல்லாம் செய்ய வேண்டும், நோய்த் தடுப்பு முறைகள் என்னென்ன என்பது குறித்தும் மிக விரிவாக விளக்கிப் பேசினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, இது போன்ற குடும்ப விழாக்களின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். காவை இளவரசுவின் மந்திரமல்ல? தந்திரமே? நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தைகள் ஆவலுடன் கண்டுகளித்தனர். குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருப்பூர் முத்துவின் மகன் வெற்றிமாறன் இயந்திர மனிதன் போன்று வேடம் அணிந்து, குழந்தைகளிடம் கணிப்பொறியின் தாக்கம், செல்பேசியின் தாக்கம் குறித்தும், ஏ.அய் குறித்தும் அருமையாக எடுத்துரைத்தார். ஈரோடு பழனிச்சாமியின் மகள்கள் ரித்திகா, மற்றும் தேவஸ்ரீ ஆகியோர் கராத்தே நிகழ்ச்சி செய்து காட்டினார். கிருத்திகாவின் மகன் பூங்குன்றன், பெரியார் படம் மற்றும் பிற படங்களை வரைந்து தனது ஓவியத் திறமையைக் காட்டினார்.

பெரியாரிய உணர்வாளர், ‘அன்பு இனிப்பு கார வகைகள்’ தயாரிப்பு நிறுவன உரிமையாளர் நல்லசிவம் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு காரம் வழங்கினார். நிறைவாக ஆசிரியர் சிவக்குமார் நன்றி கூறினார். நிகழ்வில் திரளான கழக குடும்பத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரையில் முருகேசன் இல்லத்தில் பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு 20.09.2026 அன்று குடும்ப விழா சந்திப்பு நடைபெற்றது.மதுரை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி தலைமையில் நாக. பாலன் முன்னிலையில் வாசுகி ஒருங்கிணைத்தார். குழந்தைகள் தமிழ்பிரபாகரன், இளமகிழன், தமிழ் வெண்ணிலா, இளமதி ஆகியோர் கடவுள் மறுப்பு மற்றும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி கூற தோழர்கள் உறுதி ஏற்றனர். விழாவில் கலந்து கொண்ட குழந்தைகள் உட்பட தோழர்கள் அனைவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டு, தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். தொடர்ந்து இதுபோல் குடும்பங்கள் சந்திக்கும் விழாக்களை நடத்த வேண்டும் என்று முடிவு செய்துள்ளார்கள். முருகேசன் நன்றி கூற விழாமுடிவடைந்தது.



காமாட்சி பாண்டி, மகேஸ்வரி, தமிழ்பிரபாகரன், தமிழ்வெண்ணிலா, சத்தியமூர்த்தி, நதியா, அழகர், ஆர்த்தி செல்வி, இள மகிழன், இளமதி, நாக.பாலன், செல்வி, அருள்மொழி, திலீபன், சுமித்ரா, இயலினி, கௌதமா, விஜயலட்சுமி, இனிமை, சிவசங்கரன், சாந்தி, அருள்மொழி, நிர்மலா, வழக்கறிஞர் பகத்சிங் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மதிய உணவுக்குப் பின் தோழர்கள் விடை பெற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 1,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran